DINAMALAR

18 FEB 2022

PAGE 4



# புதுச்சேரி பல்கலை மாணவர்கள் உயர்கல்விக்கு பிரான்ஸ் பயணம்

**புதுச்சேரி, பிப். 18–**

புதுச்சேரி பல்கலைக் கழக மாணவர்கள் உயர் கல்வி பயில பிரான்ஸ் நாட்டிற்கு வழியனுப்பி வைக்கப்பட்டனர்.

புதுச்சேரி பல்கலைக்கழகம், பிரான்ஸ் நாட்டில் இயங்கி வரும் பாரிஸ் பல்கலையுடன், கடந்த 2019ம் ஆண்டில் கல்வி புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டது.

அதனடிப்படையில், புதுச்சேரி பல்கலைக்கழக சமூகப் பொருளாதார நிர்வாகம் மற்றும் சட்டத் துறையின் முதுகலை மாணவர்கள் 10 பேர் இரண்டாண்டு படிப்புகளை பல்கலையில் படித்து முடித்துள்ளனர்.

இவர்கள், மூன்றாம் ஆண்டிற்கான படிப்பை பாரிஸ் பல்கலையில் வரும் கல்வியாண்டில் தொடங்க உள்ளனர்.

பிரான்ஸ் செல்ல உள்ள மாணவர்களை பல்கலைக் கழக துணைவேந்தர் குர்மீத் சிங், புல முதன்மையர்கள். துறைத் தலைவர்கள், அதிகாரிகள் உள்ளிட்டோர் வாழ்த்தி வழியனுப்பினர்.